1983 பிப்ரவரி 8]

தன்னிறைவுத் திட்டப் பணிகள் குறித்த செய்திப்படம்.

*வினா எண் 181—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தன்னிறைவுத் திட்டப் பணிகள் பற்றி அரசு செய்திப்படம் தயாரிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அப்படம் தமிழகம் முழுவதும் திரையிடப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) தன்னிறைவு திட்டப் பணிகள் பற்றிய செய்திப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இச்செய்திப்படம் தமிழகமெங்கும் திரையிடப் பட்டுள்ளது.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டப் பணிகள் பற்றி செய்திப் படம் எடுக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்தப்படம் எவ்வளவு செலவில் தயாரிக்கப்பட்டிருக்கிறது? எங்கெங்கே தமிழகத்திலே திரையிடப்பட்டிருக்கிறது என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இந்தப் படத்தினுடைய மொத்த நீளமே 144 மீட்டர் ஆகும். இந்தப் படத்தைத் தயாரிக்க 13 ஆயிரம் ரூபாயும் இந்திய அரசு திரைப்படப் பிரிவின் மூலமாக வெளியிட 109 படிகள் எடுக்க 30,372 ரூபாயும் ஆக மொத்தம் 43,372 ரூபாய் செலவழிக்கப் பட்டிருக்கிறது.

திரு. என். ஏ. பூங்காவனம்: தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்ட வேலைகள் சம்பந்தமாக செய்திப் படங்கள் தயாரித்திருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்தச் செய்திப் படத்தைத் தயாரித்தபோது எந்த எந்த இடங்களில் நடைபெற்ற பணிகளை படத்தில் எடுத்திருக்கிறார்கள்? எந்த மாவட்டம், எந்தத் தொகுதி என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, எல்லாத் தொகுதிகளையும் அந்தப் படத்திலே கொண்டுவந்துவிட முடியாது. நாம் எடுத்து இருக்கிற படத்தின் நீளமே 144 மீட்டர்கள் தான். ஆகவே பக்கத்திலே இருக்கின்ற செங்கற்பட்டு, வட ஆற்காடு மாவட்டங்கள் போன்ற பல்வேறு மாவட்டங் களிலே அந்தச் செய்திப் படங்கள் எடுக்கப்பட்டு இருக்கின்றன.